திருநெல்வேலி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 6246 /அ1 /2018, நாள். 1.19

பொருள்: பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு அ.ஆலம் என்பவரின் வாரிசுதாரர் திரு சொ.ஆ.செய்யது வீரர் அப்துல்லா என்பவருக்கு 28.07.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - சார்பாக.

பார்வை:
1. திருநெல்வேலி மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண்.5286/அ1/2012, நாள்.22.06.2017
2. அரசுக் கடிதம் நிலை எண்.86/க்யு/2010, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள்.04.05.2010
3. அரசாணை (நிலை)எண்.96 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள். 18.06.2012
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.26205/ஜே/2015, நாள். 06.2017
5. திருநெல்வேலி நகரம். ஜவகர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் ந.க.எண்.180/2018,நாள்.31.12.2018

==================

பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின்படி திருநெல்வேலி மாவட்டம், முன்னீர்பள்ளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இரவுக் காவலராக பணிபுரிந்து 21.06.2010 அன்று பணிக்காலத்தில் காலமான திரு அ.ஆலம் என்பவரின் வாரிசுதாரர் திரு சொ.ஆ.செய்யது வீரர் அப்துல்லா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக 28.07.2017 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் திருநெல்வேலி நகரம், ஜவகர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டார்.

கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் பணி வரன்முறை செய்திட ஏதுவாகக் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (6.1) | - | கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதத்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரமுறைப்படுத்தப்படுகிறது. |
| (6.2) | - | நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். |

மேற்கண்டவாறு அரசாணை பத்தி 6.1 மற்றும் 6.2-ல் தெரிவிக்கப்பட்டவாறு பார்வை 4ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாததால் கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிக்காலத்தில் காலமான திரு அ.ஆலம் என்பாரின் வாரிசுதாரர் திரு சொ.ஆ.செய்யது வீரா் அப்துல்லா என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணி இளநிலை உதவியாளரா் பதவிக்கான தகுதிகள் பெற்றுள்ளதால் நியமன நாளான 28.07.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

## நிபந்தனை

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் பொருட்டு, நடைமுறையில் உள்ள சரிபார்ப்புப் பட்டியலின்படி கருத்துரு மற்றும் இந்த பணிவரன் முறை ஆணை நகல், பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை பதிவு செய்யப்பட்ட பக்க நகல் ஆகியவற்றை உடன் அனுப்ப வேண்டும்.
2. பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
3. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
4. பணிவரன்முறை செய்த விவரத்தைப் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணைப்பு:- பணிப்பதிவேடு

மாவட்டக் கல்வி அலுவலர்,

திருநெல்வேலி.

பெறுநர்
திரு சொ.ஆ.செய்யது வீரா் அப்துல்லா,
இளநிலை உதவியாளர்,
ஜவகர் அரசு உயர்நிலைப்பள்ளி,
திருநெல்வேலி நகரம்.
(பள்ளித் தலைமையாசிரியர் மூலமாக)

நகல் - தலைமையாசிரியர், ஜவகர் அரசு உயர்நிலைப்பள்ளி,
திருநெல்வேலி நகரம்.

நகல் - சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.